

ராணி காமிக்ஸ்

சாட்டையடி வீரன்!

இமயம் சாயுமோ—என
இறுமாந்து இருந்தோம்;
இமயம் சாய்ந்ததே!
இதயமிலா பாவிகள்
மாய்வது எப்போது?
பனிமலை ஆகிவிட்ட கண்கள்
காய்வது எப்போது?

—ராணி காமிக்ஸ்

ராணி காமிக்ஸ்—10
(மாதம் இருமுறை இதழ்)

நவம்பர் 15—30, 1984

சாட்டையடி வீரன்



துப்பாக்கி எடுத்துச் செல்ல ஹூஸ்டன் நகரில் தடை விதிக்கப்பட்டு இருந்தது. கோல்டன் ஓட்டல் போன்ற இடங்களில் ஆயுதங்களை வைக்க தனி இடம் இருந்தது.

லிலோ, பிலிப், சைமன் மூவரும் சிறந்த வீரர்கள். ஆனால் நீதிக்கு கட்டுப்பட்டவர்கள். மூவரும் ஓட்டலுக்குள் நுழைந்தனர்.

அதைக் கேட்டு குமாஸ்தா அதிர்ச்சி அடைந்தார். ஓட்டல் விற்கப்பட்டதை அவர் அறிவார். ஆனால் நாடோடி போன்ற மூவரா முதலாளி என்று திகைத்தார்.
பெரியவரே அதிர்ச்சி அடையாதீர்! நீண்ட நாள் குதிரைப் பயணம் எங்களை இப்படி அசிங்கமா காட்டுது.
நான் அதை புரிந்துகொண்டேன், சார்!


பிறகு மூவரும் ஓட்டலை சுற்றி பார்த்தனர்.
இந்த ஓட்டலை நாம் வாங்கியது நல்ல முதலீடுதான்.
ஊர் ஊரா சுற்றிக்கொண்டிருந்த நாம், கொஞ்ச நாள் நிம்மதியாக இருக்க இது உதவும்.


ஆனால் அவர்கள் எண்ணத்தை தவறாக்க, ஒருவர் சாரட்டு வண்டியில் வந்தார்!
நான் சந்திக்க வேண்டிய மூன்று வீரர்களும் இங்கிருக்க வேண்டும் என பிரார்த்திக்கிறேன்.

வண்டியில் இருந்து ஒரு கனத்த உருவம் இறங்குவதை பிலிப் பார்த்தான்.
லியோ! சைமன்! ராஜகம்பீரத்துடன் ஒரு பூத உடல் பெரியவர் வருகிறார். பார்க்க வாங்க!


வந்தவர் ஓட்டல் வரவேற்பாளரிடம் பேசினார்.
நான் மெக்சிகோவில் இருந்து வர்றேன். லியோ, பிலிப், சைமன் மூவரையும் பார்க்கணும். அவங்க இங்குதானே இருக்காங்க?
அது நாங்கதான். உங்களுக்கு என்ன வேணும்?

மூவரையும் அவர் உற்றுப் பார்த்தார். பிறகு..
நான் மெக்சிகோவில் பாலீர்ஸ் பிராந்திய ராணுவ கவர்னர். ஒரு முக்கிய விஷயம் பேச வந்தேன்.
என்ன அது?


கவர்னருக்கு விருந்து அளித்தனர்.
பாலீர்ஸ் பிராந்தியத்தில் கொள்ளைக்காரர்கள் அட்டூழியம் தாங்க முடியல. கொள்ளையர் தலைவன் வால்டர் பயங்கரவாதி.
அதனால் எங்களுக்கு என்ன?

என் மக்களை கொள்ளையர்களிடம் இருந்து காக்கணும். அதுக்கு நீங்க உதவணும். உங்களைத் தேடி, பல ஊர் போய் கடைசியில் இங்கு வந்துள்ளேன்
உங்க ராணுவத்தால் அடக்க முடியலியா?

ராணுவ நடவடிக்கையில் இருந்து கொள்ளைக்காரர்கள் தப்பித்து வருவதாக கவர்னர் சொன்னார்.
உங்களை கொள்ளையருக்கு அடையாளம் தெரியாது. நீங்க வந்தா பிடித்துவிடலாம். அதற்கு மெக்சிகோ நாணயத்தில் ஆயிரம் டாலர் அட்வான்ஸ் தர்றேன்.
மீதி 4 ஆயிரம் டாலர், கொள்ளையர் கொட்டத்தை அடக்கியதும் தரப்படும் என்றும் கவர்னர் கூறினார்.
கவர்னர் அவர்களே! நீங்க சொல்றது சரி. என் நண்பர்களைக் கலந்தபின் சொல்றேன்.
லியோ, சைமனிடம் கேட்டான்.
நீ என்ன சொல்றே?
ஏழைகளும் வியாபாரிகளும் கொள்ளையர்களிடம் படும் பாட்டை அறிந்து இருக்கிறேன். எனவே எனக்கு சம்மதமே!


சட்டத்தை மதிக்கும் மூவரும், கவர்னருக்கு உதவ உறுதி அளித்தனர்.
ஜெனரல் அவர்களே! இப்போதுதான் இந்த ஓட்டலே வாங்கி இருக்கோம். கொஞ்ச நாள், ருசியா சாப்பிட்டுவிட்டு வர்றோம்.


சர்வர் உணவு பரிமாறினான்.
ருசியான சீன பதார்த்தம்.
வேண்டாம். ஐரீஸ் உணவுதான் வேணும்.


மறுநாள், ஜெனரல் அல்போன்சா புறப்பட்டார். தன் மாநில
அவர் அடைந்தபோது, ராணுவ கேப்டன் ஒருவர் எதிரே வந்த
ஏன் தனியா வர்றே? பாதுகாப்பு படையினர் எங்கே?
கொள்ளையர் தலைவன் வால்டர் பற்றி துப்பு கிடைச்சுது. அவனைப் பிடிக்க படையினருடன் மேஜர் போயிருக்கார். என்னை உங்களைச் சந்திக்கச் சொன்னார். விரைவில் அவர் வருவார்.

கவர்னர் கோபம் கொண்டார்.
அந்த மேஜர் ஒரு மடையன்.நான் வருவதை அறிந்து படையினரை திசை திருப்ப யாரோ தவறான துப்பு கொடுத்திருக்காங்க.
அப்படியானா, அது ஏமாத்து வேலையா?

கொஞ்ச தூரம்தான் அவர்கள் போய் இருப்பார்கள். காட்டில் இருந்து சிலர் குதிரையில் பாய்ந்து வந்தனர்.
அதோ! வால்டரின் கொள்ளைக் கூட்டம்.


உடனே வண்டி மின்னல் வேகத்தில் பறந்தது. கேப்டன் பின்தொடர்ந்தார்.

சாரட்டு வண்டியை கொள்ளையர்கள் துரத்தினார்கள்.
உத்தரவு—
எச்சரிக்கை செய்ய சுடு! ஜெனரலை உயிரோடு பிடிக்கணும்!

ஆனால் ஜெனரலின் வண்டி நிற்கவில்லை.
டிரைவர்! வேகமா போ!
முடிந்தவரை வேகமா போறேன் ஜெனரல்!

வால்டரை நோக்கி கேப்டன் சுட்ட குண்டு, குறி தவறி ஒரு கொள்ளையனை வீழ்த்தியது.

வெறி கொண்ட கொள்ளையர், கேப்டனை சுட்டுத்தள்ளினார்கள்.


கீழே விழுந்த கேப்டன் மீது குதிரைகள் ஏறிச் சென்றன. அவர் உயிர் இழந்தார்.
ஆoooo!


கேப்டன் இறந்ததும் ஜெனரல் பதறினார்.
ஏய்! டிரைவர் பறந்து போ! அவர்கள் நெருங்குகிறார்கள்!
ஜெனரல்! இங்கே பாருங்க!


அங்கே தளபதி ராணுவ வீரர்களுடன் வந்துகொண்டிருந்தார்.
நல்லவேளை! மேஜர் வந்துவிட்டார்!


படையினரைப் பார்த்ததும், கொள்ளையர்கள் வேறு பக்கமாக திரும்பி ஓடினர்.
ஜெனரல்! அவர்களைப் பின்தொடர்ந்து போய் பிடித்துவிடுகிறேன்.

வேண்டாம்! போவது போல் போய் வேறு வழியா வந்து என்னை பிடிப்பார்கள். நாம் தலைநகர் திரும்புவோம்!
ஜெனரல் உத்தரவு!


பயணம் தொடர்ந்தது.
அந்த மலைப்பகுதியில், பல குகைவாய்கள் உள்ளன. அதில் கொள்ளையர்கள் மறைந்து கொள்கிறார்கள்.
கொள்ளையரைப் பிடிக்க நம் படை வீரர்கள் பயன்பட மாட்டாங்க. அதனால் சரியான மாற்று ஏற்பாடு செய்திருக்கேன்!

ஜெனரலும், படை வீரர்களும் போவதை மலை முகட்டில் இருந்து வால்டர் பார்த்தான்.
கொஞ்சம் காலதாமதம் ஆனதால் நம்ம தந்திரம் பலிக்கவில்லை. நம்ம ஆள் ஒருவன் செத்துட்டான். கவர்னர் இப்போ தப்பிக்கலாம். ஆனா அவரை விடமாட்டேன்.

தன் மாளிகையில், பாங்கி அதிகாரி ஆஸ்காரிடம் 2 லட்சம் அமெரிக்க டாலர் நோட்டுகளை கொடுத்து கவர்னர் ரசீது வாங்கினார்.
இந்தப் பணத்தை, எங்கள் மாநில அரசு சார்பில், அமெரிக்க மத்திய அரசு கடன் பத்திரங்களில் முதலீடு செய்யுங்க.
நன்றி கவர்னர்! இந்த ரசீதில் எனது மேலதிகாரியும், நானும் கையெழுத்து போட்டிருக்-கிறோம். இனி பணத்துக்கு நாங்க பொறுப்பு.


ஆஸ்கார், டெல் மாரினா என்ற இடத்தில் உள்ள பாங்கி தலைமை கேஷியர். பணத்தை பெற்றுக்கொண்ட அவர்—
கவர்னர் அவர்களே! பெரிய தொகையை நான் எடுத்துச் செல்ல வேண்டி உள்ளது. எனவே உங்க படையினரை பாதுகாப்புக்கு அனுப்புங்க!
ஆஸ்கார்! வீரர்கள் அனைவரும் பல வேலையா பல இடங்களுக்கு போய் இருக்காங்க. நீங்க தனியாத்தான் போகணும்.

ஆஸ்கார் அதிர்ச்சி அடைந்தார்.
கொள்ளையர் மறித்தால் என்ன செய்வது?
ஆஸ்கார்! பாதுகாப்போட போனா கொள்ளையர் தலைவன், வால்டருக்கு சந்தேகம் வந்து தாக்குவான். எனவே ராணுவ பாதுகாப்பு உங்களுக்கு ஆபத்து.
ஆஸ்கார், பாதுகாப்பு கேட்டு வற்புறுத்தினார்.
அப்படியே என் வீரர்கள் வந்தாலும், இந்த மாநில எல்லை வரைதான் வரமுடியும் அதுக்கு அப்புறம் ஆபத்துதானே! ஆரம்பத்துல இருந்தே தனியா போனா நல்லது.
மாநில எல்லையைக் கடக்க படை வீரர்களுக்கு அதிகாரம் இல்லை; ஆனால் கொள்ளைக்காரர்கள் விவசாயிகள் போல எல்லையைக் கடந்துவிடுவார்கள் என்றும் கவர்னர் கூறினார்.
சாதாரண வழிப்போக்கன் போல போங்க. பணம் இருப்பதா காட்டிக்கிடாதீங்க. அதுதான் உங்களுக்குப் பாதுகாப்பு.

உங்க மாநில எல்லைக்கு அப்பால் எனக்கு பாதுகாப்பு இருக்கு. உங்க மாநிலத்தில்தான் கொள்ளையர் அட்டகாசம் நிறைய இருக்கு. உங்க பணத்துக்குதான் பாதுகாப்பு கேட்கிறேன்.
ஆஸ்கார்! உங்க கையில் பணம். என் கையில் அதற்கான ரசீது. இனி அதுக்கு நீங்களும் பாங்கும்தான் பொறுப்பு.
வேறு வழி இல்லாமல் ஆஸ்கார் தனியாக புறப்பட்டார்.
2 லட்சம் டாலர்கள்! என் வாழ்நாளில் இவ்வளவு பெரிய தொகையை எடுத்துச் சென்றது இல்லை. இதை எப்படி பாதுகாப்பா கொண்டு போறது? பயமா இருக்கே!


பாங்கி தலைமைக் கேஷியரின் தனிமைப் பயணம் தொடங்கியது.
நேரான பாதை வழியா நான் போகலே. அதனால் கொள்ளையர் பார்வையில் இருந்து தப்பிக்கலாம்.

பிற்பகல். ஆஸ்கார் ஒரு மரத்தடியில் இளைப்பாறினார். அப்போது குதிரைகள் சத்தமும், பேச்சு சத்தமும் கேட்டது.
வடக்கு சாலையில் சாரட்டு வண்டி போகுது. அதை நிறுத்துவோம். நாம் எதிர்பார்க்கும் பணம் அதில் போகலாம்.


ஆஸ்கார் உற்றுப் பார்த்தார்.
இவர்கள் வால்டரும் அவரது கொள்ளைக் கூட்டத்தினரும் அல்லவா?

அவர்களைப் பார்த்ததும் சாரட்டு பறக்கத் தொடங்கியது.
வண்டியில் இருந்த காவலாளி துப்பாக்கியால் சுட்டான்.


துப்பாக்கி குண்டு பாய்ந்து கொள்ளையர் கதறினர்.
ஆ! என் கழுத்து!
என் கை!
அந்தக் காவலாளி ஏன் இப்படி சுடறான்?


காவலாளியை, வண்டி ஓட்டி எச்சரித்தான்.
சுடுவதை நிறுத்து. அவர்கள் வால்டரின் ஆட்கள்! எப்படியும் நம்மை பிடிப்பார்கள்.


வண்டி நின்றது. கொள்ளையர் தலைவன் வால்டர் அங்கே வந்தான்.
வால்டர் மன்னிக்கணும். உங்களை நாங்க அடையாளம் தெரிந்துகொள்ளவில்லை.
சுட்டதில் யாரும் சாகவில்லை. உம்.. வண்டியில் பணம் இருக்கிறதா?
இல்லை. வண்டியில் ஆட்கள் கூட இல்லை. தபால் எடுக்கப் போகிறோம்.


வண்டியை சோதனை போட்டார்கள். எதுவும் இல்லாததால் போக விட்டார்கள்.
ஐயோ! அவர்கள் இந்தப் பக்கம் வருகிறார்களே! என்னை கண்டுபிடித்து விடக்கூடாதே!


ஆஸ்கார் மறைந்துகொண்டு கேட்டார்.
கவர்னர் அல்போன்சா 2லட்சம்டாலரை கொடுத்து அனுப்புவது பற்றி தகவல் வந்திருக்கு. ஆனா, பணம் எப்படி போகிறது என்று தெரியலே
பணத்தை வழியில் பறிப்போம். முடியாவிட்டால் பாங்கி போகட்டும். அங்கே கொள்ளை அடிக்கலாம்!


அவர்கள் பேசுவது ஆஸ்கார் காதில் விழுந்தது.
நாம் டெல் மாரினா நகரம் போவோம். பாங்கிக்கு அடுத்த வீடு காலியா உள்ளது.
அதன் வழியா நுழைஞ்சு, கன்னம் வைத்து, பாங்கி பெட்டகத்தை உடைப்போம்.


கொள்ளையர்கள் போய்விட்டார்கள். அவர்கள் திட்டம் ஆஸ்காருக்கு புரிந்தது.
பணம் என்னிடம் இருப்பதை அறிந்தால் அவர்கள் என்னை சந்து சந்தா பிய்த்து இருப்பார்கள்!

கொள்ளையர் திட்டத்தை அறிந்த ஆஸ்காரின் மனதில் ஒரு சதித் திட்டம் உருவாகியது.
இந்தக் கொள்ளையரைப் பயன்படுத்தி என் திட்டத்தை நிறைவேற்றுவேன்

ஆஸ்கார், வழியில் காவல் தலைவர் ஷெரீப்பை சந்தித்தார். ஷெரீப் ஆஸ்காருக்கு பாதுகாப்பா டெல் மாரினு நகர் வரை வந்தார்.



அப்போது, லியோ, பிலிப், சைமன் மூவரும் அங்கே வந்தனர்.

ஆஸ்கார் பாங்கிக்கு போனதும் அங்கே வால்டரையும் அவன் கூட்டாளியையும் பார்த்து திடுக்கிட்டார்.
இந்த மெக்சிகோ பணத்துக்கு அமெரிக்க பணம் வேணும்.
பாங்கியில் பணப் பெட்டகம் இருக்கும் இடத்தை நோட்டம் விடுறுங்க!
பாலீர்ஸ் கவர்னர் அல்போன்சா கொடுத்த பணத்தை கேஷியர் பாங்கி மானேஜரிடம் ஒப்படைத்தார். பணம் பெட்டகத்தில் வைககப்பட்டது. அன்றிரவு ஆஸ்கார் பாங்கிக்கு வந்து—
யாரும் இல்லே. பின்புறமா நுழையணும்!
பக்கத்து சந்து வழியா வந்து பாங்கி பின்வாசலே அடைந்த ஆஸ்கார், தன்னிடம் இருந்த மாற்றுச் சாவியால் கதவைத் திறந்தார்.



கொஞ்ச நேரத்தில் கொள்ளையரும் வந்தனர்.
பாங்கி கதவை உடைச்சே புகுந்திருக்கலாம்.
அது ஆபத்து. பாங்கி இரும்புப் பெட்டி பின்பக்கம் பலம் இல்லாமல் இருக்கும். அதை உடைக்க இந்த காலி வீடு வழியா போவதே வசதி.

சுவரில் கன்னம் வைக்க 3 பேர் தயார் ஆனார்கள். ஒருவன் யாரும் வருகிறார்களா என்று நோட்டம் பார்த்தான்.
இந்தா உளி, சுத்தியல்.
வாத்தியக் குழு வந்தாச்சு. வேலையை தொடங்குங்க!

வாத்தியக் குழுவினராக வந்தது கொள்ளையர்கள்தான். சுவரை உடைக்கும் சத்தம் கேட்காமல் இருக்க பாட வந்தார்கள்.


ஷெரீப் இரவு ரோந்து போய்க்கொண்டு இருந்தார். அவருடன் லியோ, பிலிப், சைமன் மூவரும் பேசினர்.
யார் இந்த வாத்திய கோஷ்டி ஷெரீப்?
எல்லைப் பகுதியைச் சேர்ந்தவங்க போலிருக்கு. பார்த்தா நல்லவங்களா தெரியுது.
பழைய மெக்சிகோவின் தேசிய பாடலை பாடுறுங்க.


வாத்தியக் குழுவினர் ஆடிக்கொண்டே பாடினர்.
ஷெரீப்! இந்த நகரத்தில் ஆயுத தடை இருக்கா?
ஆமா! ஆயுதங்களை வெளியே கொண்டுபோக கூடாது

பாட்டுச் சத்தத்தில் சுவரில் ஓட்டை போடும் வேலை மும்முரமாக நடந்தது!
சத்தம் போட்டு பாடுருங்க. அதனால் உடைக்கிற சத்தம் வெளியே கேக்காது!

ஆனால், பாங்கி சுவரை உடைக்கும் சத்தத்தை ஆஸ்கார் கேட்டுக் கொண்டிருந்தார்!
அவர்கள் நுழையும் முன் நான் வேலையை முடிக்கணும்!
மாற்றுச் சாவியால் கேஷியர் ஆஸ்கார் இரும்பு பெட்டியைத் திறந்தார்.
கொண்டு வந்த 2 லட்சம் டாலர் போக 25 ஆயிரம் டாலரும் இருக்கு. என்னிடம் இருந்த மாற்றுச் சாவி வாழ்க!
ஆஸ்கார், கதவை மூடினார்.
நல்லவேளை! சந்தில் யாரும் இல்லை. நைசா நழுவிவிட வேண்டியதே!

ஆனால் ஆஸ்கார் நினைப்பு தவறாகியது. ரோந்து வந்த ஷெரீப் எதிரே வந்தார்.
ஷெரீப்!
என்ன கேஷியர்! எக்ஸ்ட்ரா வேலையா? கதவு திறந்திருந்ததும் என்னவோ ஏதோ என்று நினைத்தேன்.
அப்போது ஆஸ்கார் கையில் இருந்த பை நழுவ, பணம் சிதறியது!
ஆஸ்கார்! இதென்ன டாலர் நோட்டுகள்?
உடனே ஷெரீப்பை ஆஸ்கார் ஓங்கி உதைத்தார்.
ஆ.

ஷெரீப்பின் துப்பாக்கியை ஆஸ்கார் எடுத்து அவர் தலையில் அடித்தார்.
நீ உயிரோடு இருந்தால் உண்மை தெரிஞ்சிடும். நான் அடித்த கொள்ளைக்கு அந்த மெக்சிகோ கொள்ளையர் பழி ஏற்கணும்.
ஷெரீப் இறந்துவிட்டார் என்று நினைத்த ஆஸ்கார் கொள்ளைப் பணத்துடன் விரைந்தார்.
வெளியே பாட்டு—ஆட்டம். உள்ளே இடிக்கும் வேலை!
இதோ இரும்பு பெட்டி. இனி வெடிவச்சு உடைக்கணும்!

கொஞ்ச நேரத்தில் வெடிகுண்டை, வைத்து சாக்கு மூடைகளால் மூடி, தீ வைத்தார்கள். குண்டு வெடித்து கட்டிடம் அதிர்ந்தது.
குண்டு வெடித்ததால் இரும்பு பெட்டியில் ஓட்டையும் ஏற்பட்டது.
சீக்கிரம்! பணத்தை அள்ளு!
வெடிச் சத்தம் கேட்டதும் பாடகர்கள் பறந்தார்கள். லியோவும் நண்பர்களும் பரபரத்தார்கள்.
பாங்கியில் வெடி விபத்து
ஷெரீப்புக்கு தகவல் சொல்லணும்.

திடீர் என்று அங்கே வால்டரும் சில கொள்ளையரும் தோன்றினர்.


அதைப் பார்த்த லியோ, பிலிப், சைமன் மூவரும் அதிர்ச்சி அடைந்தனர்.
இதோ கொள்ளைக் கூட்டம். பாங்கி கொள்ளையா?
எங்கள் தலைவர் வால்டருக்கு வழி விடுங்க!

நிலைமையைப் புரிந்துகொண்ட 3 வீரர்களும் செயலில் இறங்கினர்.

கொள்ளையருடன் மோதல் தொடங்கியது. சாட்டையடி வீரரான பிலிப் சாட்டையை சுழற்றினான்.
ஒற்றைக் கண்ணா வழி விடு!
கேலியா பண்றே? இதோ பார்!


பிலிப், சவுக்கால் சுழற்றி சுழற்றி அடித்தார்.


கொள்ளையர்கள் நகரத்தைவிட்டு வெளியேறினார்கள்
இன்றைய திட்டம் வெற்றி இல்லையா வால்டர்? 2 லட்சம் டாலர் நமக்கு கிடைப்பது இதுவே முதல் தடவை!
நீ நினைப்பது தவறு. பாங்கி இரும்புப் பெட்டி காலியா இருந்தது இன்று நமக்கு தோல்வி. நாம் பட்டபாடு வீண்!


டெல் மாரினா நகரத்தின் ஒரு ஒதுக்குப்புற வீட்டில் ஆஸ்கார் மறைந்து இருந்தார்.
ஆகா, வெற்றி! என்னிடம் 2 லட்சம் டாலர்! இனி வேலையை ராஜினாமா செய்வேன். மெக்சிகோ போய் ஜாலியா இருப்பேன். பாங்கி நிலவரம் என்ன என்று பார்க்க வேண்டும்.

கொள்ளை பற்றி நகரம் முழுவதும் தகவல் பரவி, பாங்கி முன் கூட்டம் திரண்டது. அவர்களுடன் லியோ, பிலிப், சைமன் மூவரும் சேர்ந்துகொண்டனர்.
என்ன நடந்தது?
பாங்கியில் கொள்ளை. ஷெரீப், பக்கத்து சந்தில் அடிபட்டு கிடக்கிறார். டாக்டர் அவரை பார்க்கிறார்!

பக்கத்து சந்தில்—
டாக்டர் அவர் இறந்துவிட்டாரா?
இல்லை. ஆனா தலையில் பலத்த அடி.
கூட்டத்தோடு நின்றிருந்த ஆஸ்கார் அதைக் கேட்டு அதிர்ந்தார்.
ஷெரீப் சாகலியா? அப்படியானால் எனக்கு ஆபத்தாச்சே!
ஆஸ்கார் நைசாக நழுவிச் சென்றார்.
நாம் படை திரண்டு போய் அந்த மெக்சிகோ பாடகர்களை பிடிக்கணும்.
ராவோடு ராவா அவங்க எங்கே போனாங்களோ!

கொள்ளையர்களைப் பிடிக்க லியோ, பிலிப், சைமன் ஆகிய 3 வீரர்கள் தலைமையில் குதிரை வீரர்கள் சிலர் திரண்டனர். இரவெல்லாம் அவர்கள் பயணம் செய்து விடியும் தருவாயில், ஒரு ஆற்றங்கரையை அடைந்தனர்.


வீரர்கள் ஆற்றைக் கடந்து கொஞ்ச தூரம் போனதும்—
இந்த நீர்த் தேக்கத்தைக் கடந்து போய் இருக்காங்க.
அதற்கு அருகே மெக்சிகோ எல்லை. நாம் அங்கே போக அதிகாரம் இல்லை.
உங்களுக்கு அதிகாரம் இல்லாமல் இருக்கலாம். ஆனா எங்க மூன்று பேருக்கும் அதிகாரம் இருக்கு. பாலீர்ஸ் ராணுவ கவர்னர் எங்களுக்கு அதிகாரம் கொடுத்து இருக்கார்.


மற்ற வீரர்களை அனுப்பிவிட்டு நண்பர்கள் மூவரும் நீர்த்தேக்கத்தை கடந்தனர்.


கொஞ்ச நேரத்தில் அவர்கள் ஒரு கிராமத்தை அடைந்தனர்.
இங்கே வால்டரின் கூட்டம் பற்றி கேட்போம்.

வால்டர் பெயரைக் கேட்டதும் குடியானவர்கள் ஓட்டம் பிடித்தனர்!
என்ன இப்படி ஓடுராங்க?
வால்டரைத் தெரியுமா என்றுதான் கேட்டேன்.
அவன் பெயரைக் கேட்கவே நடுங்குறுங்களே!


யாரைக் கேட்டாலும் வால்டர் பற்றி பதில் இல்லை 3 வீரர்களைப் பார்த்து கதவுகள் சாத்தப்பட்டன. ஜன்னல்கள் அடைக்கப்பட்டன!
நம்மை இவர்கள் புரிந்து கொள்ளவில்லை.
வால்டர் என்றால் குலை நடுக்கம். அப்படி அட்டூழியம் செய்திருக்கான்.

மூவர் பயணம் தொடர்ந்தது. கொஞ்ச தூரம் சென்றதும் குதிரைகளின் தடம் தெரிந்தது.
குதிரைகள் ஒரு கூட்டமா, வேகமா ஓடியது தெரியுது.
சைமன்! அதோ பாரு தனியா ஒரு பயணி. அவரிடம் கேட்டுப் பார்ப்போம்


3 வீரர்களும் அந்த பயணியை நெருங்கினர்.
இந்த ஆளைப் பார்த்தா, மெக்சிகோகாரன் மாதிரி இல்லை.

அந்த பயணி வேறு யாரும் இல்லை. ஆஸ்கார்தான். அவர் 3 வீரர்களையும் பார்த்து பயந்தார்.
என்ன வேணும்?
இந்த ஆளை நினைவு இருக்கு. நாங்க டெல் மாரினு நகர் வந்ததும் ஷெரீப்போடு பேசினப்போ இவன் இருந்தான். பெயர் ஆஸ்கார்!


தன்னிடம் பணம் இருப்பதைத் தெரிந்து கொள்ளை அடிக்க அவர்கள் வந்திருப்பதா ஆஸ்கார் பயந்தார்.
என்னிடம் இருந்து பணத்தைக் கொள்ளை அடிக்கவா பின்தொடர்ந்து வாரீங்க?
ஆஸ்கார் துப்பாக்கியை எடுத்து—
உங்க பாச்சா என்னிடம் பலிக்காது. இந்த பணத்தை தொட்டா சுடுவேன்.
ஆஸ்காரின் நடவடிக்கை 3 வீரர்களையும் திகைக்க வைத்தது. அவரிடம் உள்ள பணம் பற்றி அவர்களுக்கு சந்தேகம் ஏற்பட, லியோ துப்பாக்கியை எடுத்து—
மிஸ்டர் உன் மிரட்டல் பலிக்காது!


லியோவிடம் இருந்து புறப்பட்ட குண்டு ஆஸ்கார் கையை பதம் பார்த்தது.
ஐயோ! என் கை!
சத்தம் போடாதே! உன்னிடம் உள்ள பணத்துக்கு விளக்கம் சொல்.
என்னைச் சுடாதே! எல்லா விவரமும் சொல்றேன்.
சரி! சொல். இந்தப் பணம் ஏது?
பாங்கி தலைமை கேஷியரான ஆஸ்கார் தன்னிடம் பாங்கி பெட்டகத்துக்கு மாற்று சாவி இருந்ததையும், கொள்ளையர் திருட திட்டமிட்டதை பயன்படுத்தி, தான் பாங்கியில் திருடியதையும் விவரித்தார்.
இந்தப் பையில் கவர்னர் அல்போன்சாவிடம் இருந்து பெற்ற 2 லட்சம் டாலர். பாங்கியில் ஏற்கனவே இருந்த பணம் எல்லாம் இருக்கு
அவர்கள் பேசியதை 2 மர்ம உருவம் கேட்டது!

அவர்கள் வால்டரும், கூட்டாளியும்!
நீ ஓடிப் போய் நம் ஆட்களை அழைத்துவா.
இதோ!

ஆஸ்கார்! பணத்தை பாங்கியில் ஒப்படைப்போம். நீ கம்பி எண்ணனும்!


அப்போது கொள்ளையர் தலைவன் அங்கே தோன்ற—
அந்த ஆளை என்ன வேண்டுமானாலும் செய்யுங்க. ஆனா பணத்தை என்னிடம் கொடுத்திடுங்க. இல்லையேல் உங்கள் உயிர் உங்களுக்கு இல்லை.

3 வீரர்கள் மூளையும் துரிதமாக வேலை செய்தது. பிலிப் சாட்டையை வீசத் தயார் ஆக, லியோ பணப் பையை வால்டர் மீது வீசினான்.
இந்தா பணம்!

சந்தர்ப்பத்தை பயன்படுத்தி பிலிப் சாட்டையை சுழற்ற, அது வால்டர் கையை இறுக்கியது!
ஆ!
சைமன்! அந்தத் துப்பாக்கியை எடுத்துக்கோ.
அந்த நேரத்தில் கொள்ளையர்கள் அங்கே பறந்து வர—
என் ஆட்கள் வந்தாச்சு! மரியாதையா சரண் அடையுங்க இல்லை உயிர் தப்பாது!


வால்டர் மிரட்டலுக்கு சைமன் பணியவில்லை.
அங்கே நில்லுங்க! எங்களை சுட்டால், உங்க தலைவன் குளோஸ்! ஜாக்கிரதை!


வேறு வழி இல்லாமல் கொள்ளையர் திகைத்து நின்றனர்.
அவர்களைப் போகச் சொல்.
தோழர்களே! திரும்பிப் போங்க! இது உங்க தலைவன் உத்தரவு!
இனி இவன் கையை கட்டுவோம்!


மனம் இல்லாமல் வால்டரின் ஆட்கள் திரும்பிச் சென்றனர்
வால்டரின் கைகள் கட்டப்பட்டன.
லியோ அடுத்து என்ன? டெல் மாரினை பாங்கி போவோமா?
வேண்டாம். முதலில் வால்டரை கவர்னர் அல்போன்சா வசம் ஒப்படைக்கணும். தாமதித்தால் கொள்ளையர் தாக்கலாம். ஆஸ்காரையும் கொள்ளைப் பணத்தையும் கடைசியில் ஒப்படைக்கலாம்.


வால்டரும் ஆஸ்காரும் ஒரு குதிரையில் வைத்து கட்டப்பட்டு கொண்டு செல்லப்பட்டனர்.
வால்டர் கைது பற்றி எல்லோரிடமும் சொல்வோம். அது அவரை காப்பாற்ற உதவும்.
அது எப்படி முடியும்? அவரை 3 துப்பாக்கிகள் குறிபார்க்கின்றன.
தலைநகர் பாலீர்ஸ் போக நேரமாகும். அதுக்குள் எவ்வளவோ செய்யலாம். உம்...வாங்க!


வால்டர், ஆஸ்கார் இருவரையும் பிடித்துக்கொண்டு 3 வீரர்களும் தலைநகரை நோக்கி சென்றார்கள்.
லியோ! கொள்ளைக் கூட்டத்தினர் கோஷ்டி கோஷ்டியா பிரிஞ்சு போறாங்களே! அவங்க திட்டம் என்ன?
அதைத்தான் யோசிக்கிறேன். நாம் விழிப்பா இருக்கணும். அவங்க திடீர் தாக்குதல் நடத்தி வால்டரை மீட்க முனையலாம்.


அவர்கள் கொஞ்ச தூரம் போனதும் பின்னால் ஒரு கூட்டம் வந்தது!
எல்லோருமே கொள்ளையர்தானா?
லியோ நீ சொன்னது சரியா போச்சு. வால்டரை துப்பாக்கி முனையில் பிடி. இல்லாவிட்டால் நமக்கு ஆபத்து!
இல்லை. இவர்கள் குடியானவர்கள். மந்தை ஓட்டிகள் மற்றும் தொழிலாளர்கள்.


ஒரு மெக்சிகோ கிராமத்தை நெருங்கினர்.
வால்டர் பிடிபட்டது பற்றி எப்படி இவ்வளவு சீக்கிரம் செய்தி பரவியது?
ஒரு மரம் வெட்டி வழியில் பார்த்தான் அல்லவா! அவன் சொல்லி இருப்பான்.
கொள்ளையர் தலைவனை விசாரணை இல்லாமல் பழி தீர்க்க வாராங்க!


லியோ, பிலிப், சைமன் மூவரும் நீதிக்காக பாடுபடுபவர்கள். எனவே வால்டர் விசாரிக்கப்பட்டு தண்டிக்கப்படவே அவர்கள் விரும்பினர்.
இதோ ரத்த வெறி கொண்ட குடியானவர்கள்.

குடியானவர்கள் பிடியில் இருந்து தப்பிக்க மூவரும் குதிரையை வேகமாக ஓட்டினர்.
இந்த மூவரையும் கொல்வோம்! வால்டர் வாழ்க!
தலைவர் வால்டர் வாழ்க!

கைதிகளுடன் 3 வீரர்களும் அந்தக் கிராமத்தைத் தாண்டிச் சென்றனர்.
லியோ! இந்த வால்டரை அவங்க விரும்புகிற மாதிரி தெரியுதே!

உண்மையை அறிய அவர்கள் வால்டரை விசாரித்தனர்.
வால்டர்! குடியானவர்கள் உன்னை வாழ்த்தக் காரணம்?
ராணுவ கவர்னர் அடக்குமுறை ஆட்சியை நானும் என் கூட்டத்தாரும் எதிர்க்கிறோம். கவர்னரை கொள்ளை அடித்து குடியானவர்களுக்கு உதவுகிறேன்.


கவர்னர் அல்போன்சாவின் அநியாயமான வரிகள், நியாயமற்ற போக்கு ராணுவ வீரர்களுக்குகூட அவரைப் பிடிக்காத நிலை ஆகியவை பற்றி வால்டர் விவரித்தார்.
பாங்கியில் கட்ட கவர்னர் கொடுத்த பணம், மக்களிடம் திருடியது. அதை அபகரித்து மக்களிடம் கொடுப்பதே என் நோக்கம்.


அதனால்தான் பாங்கியை கொள்ளை அடிக்க முயன்றதாகவும் வால்டர் கூறினார்.
மெக்சிகோ நகரில் மத்திய அரசு அலுவலகம் உள்ளது. அங்கே கவர்னரைப் பற்றி புகார் செய்வதுதானே?
அங்கேயும் கவர்னருக்கு செல்வாக்கு இருக்கு. புகார்கள் விசாரிக்கப்படுவது இல்லை. மாறாக புகார் கொடுத்தவர்கள் பழிவாங்கப் படுகிறார்கள்.

கவர்னர் அல்போன்சாவின் கொடுங்கோல் ஆட்சியை 3 வீரர்களும் கொஞ்ச தூரத்தில் கண்டனர்.




கவர்னரின் அதிகாரி விவசாயியை தாக்கியதைப் பார்த்ததும், லியோவுக்கு கோபம் கொப்பளித்தது.
வரிப் பாக்கிக்காக தானியம் வெள்ளிப் பணம் அனைத்தையும் எடுத்துக் கொள்றேன்.
நிறுத்து!

குரல் வந்த திசையை நோக்கி அதிகாரி பார்த்தார். ஆத்திரம் கொண்டார். தன்னை நிறுத்தச் சொல்லி அதிகாரம் பண்ணுபவனை நோக்கி துப்பாக்கியைத் தூக்கினார்.

ஆனால் அதற்குள் லியோ சுதாரித்து தன் துப்பாக்கியை எடுத்து மண்டையில் அடித்தார்.
என்ன தைரியம் உனக்கு?


லியோவை ராணு வீரன் சுட எத்தனிக்கும்போது, பிலிப் சவுக்கால் அடித்து திணற அடித்தார்.
ஐயோ!
எங்களை யாருன்னு நினைச்சே!

வால்டர் கூறியது அனைத்தும் உண்மை என்று உணர்ந்த,லியோ. வால்டர் கைக் கட்டை வெட்டினர்.
உன்னைப் பிடிக்கும்படி கவர்னர் எங்களுடன் ஒப்பந்தம் செய்தார். ஆனல் இப்போ உண்மையை உணர்ந்துகொண்டோம்.

வால்டரை மீட்க வந்துகொண்டிருந்த கூட்டத்தினர் அவரை தூக்கி மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.
மக்கள் தலைவர் வால்டர் வாழ்க!
முதலில் எங்களைப் பார்த்ததும் ஓடி ஒளிந்த கிராமவாசிகளும் இதில் உள்ளனர். எங்களை கவர்னரின் கையாட்கள் என்று நினைத்து அப்படிச் செய்திருக்கிறார்கள்!

அதைப் பார்த்ததும் வரி வசூலுக்கு வந்த அந்த அதிகாரியும், ராணுவ வீரர்களும்கூட மனம் மாறினர்.
அநியாய ஆட்சிக்கு முடிவு வந்துகொண்டு இருக்கு!
சார்! நாமும் வால்டர் பக்கம் சேர்ந்துவிடுவோம். விரைவில், மக்கள் புரட்சி வெடிக்கப் போகுது!


ராணுவ வீராகள் வால்டர் பக்கம் சேர்ந்துகொண்டனர்.
கவர்னரின் அட்டூழியம் தாங்கமுடியல இப்பவே போய் அவர் மாளிகையை தாக்குவோம்.
அவரிடம் படை பலம் இருக்கு.
படை வீரர்களும் அதிருப்தி அடைஞ்சு இருக்காங்க. பல வீரர்கள் வரி வசூலுக்காக பல இடங்களுக்கு அனுப்பப்பட்டு உள்ளனர். இதுவே தக்க தருணம்!

கவர்னர் அலுவலகத்தை தாக்க வால்டர் புறப்பட...
நாம் நியாயவாதிகள். கவர்னர் தன் அநியாயத்துக்கு நம்மை உட்படுத்த பார்த்தார். அவருக்கு பாடம் கற்பிக்கணும். நீதி நிலைக்கணும்.
நாமும் போவோம்!
அதுதான் சரி!
உங்க போராட்டத்தில் நான் பலி ஆகிவிடக் கூடாது.

மூன்று வீரர்கள் வால்டருடன் சேர்ந்ததும், அவருக்கு உற்சாகம்!
எல்லா ஊரிலும் எனக்கு ஆதரவு இருக்கு. வழி நெடுக ஆட்கள் சேர்வாங்க. அல்போன்சா ஆட்சிக்கு முடிவு கட்டுவோம்!
வால்டர், லியோ, பிலிப், சைமன் ஆகியோர் பின்னால் மக்கள் வெள்ளம் என திரண்டு வந்தனர்.
கவர்னர் அவர்களே! ஆபத்து! மக்கள் புரட்சி நடத்த வால்டர் தலைமையில் வாராங்க!
என்ன?

வெளிக் கதவை உடைத்துக்கொண்டு புரட்சி வீரர்கள் உள்ளே புகுந்தனர். அதைப் பார்த்து, கவர்னர் கலங்கினார்.
இப்போ என்ன செய்ய?
மாளிகைக் கதவை பூட்டி, கவர்னர் தப்பிக்க முனைந்தார்.
ஓடிவா! கதவை பூட்டு! சாரட்டு வண்டியை தயார் பண்ணு!


ஆனால் அவர் தப்பிக்க வழி இல்லை. கதவு உடைக்கப்பட்டது! முதலில் பிலிப் பாய்ந்து வந்தார்!


ஒத்தைக் கண் பிலிப் கவர்னரைப் பிடித்து உலுக்கினார்.
என்னை மன்னித்துவிடுங்கள். என்னை உயிர் வாழ விடுங்கள்! பிளீஸ்!
உமது தவறை உணர்ந்து திருந்தினால் நீர் உயிர் வாழலாம். ஆனால் நீர் மக்களுக்கு செய்த அநீதிக்கு தண்டனை அனுபவிக்கணும்!

அதைத் தொடர்ந்து கொடுங்கோல் ஆட்சி முடிந்தது. மக்கள் நிம்மதி அடைந்தனர். வால்டர் தன் நண்பனுடன் தனது பழைய தொழிலான மந்தை மேய்க்கும் தொழிலுக்கு திரும்பினர்.
நண்பா! நாம் ஒரு நல்ல காரியத்துக்காக கொள்ளை அடித்தோம். இனி புதிய வாழ்வைத் தொடங்குவோம்.

கவர்னர் அல்போன்சா சிறைத் தண்டனை விதிக்கப்பட்டார்.
அல்போன்சா! பழைய கவர்னர் என்று நினைக்காதே. ஒழுங்காவேலை செய். இல்லை, ரொட்டியும் கிடையாது; தண்ணியும் கிடையாது!



ராணி சிண்டிகேட் சார்பில் வெளியிட்டவர், ஆசிரியர்: எஸ்.ராமஜெயம், 1091,பெரியார் நெடுஞ்சாலை, சென்னை–600 007. அச்சிட்டவர்: சி.கல்யாண சுந்தரம், ராணி அச்சகம்,1091,பெரியார் நெடுஞ்சாலை, சென்னை–600 007

ரூ. 50/- பரிசு: கருத்துப் போட்டி -2

"சாட்டையடி வீரன்" சித்திரக் கதையை படித்துவிட்டீர்கள் அல்லவா? இனி இந்தக் கதையில், உங்கள் மனதைக் கவர்ந்த சம்பவம் எது? அதற்கான காரணம் என்ன? என்று உங்கள் கருத்தை, "ராணி காமிக்ஸ்", ஒரு பக்க அளவுக்கு மிகாமல், எழுதி அனுப்புங்கள்.

மிகச் சிறந்த கருத்துக்கு ரூ. 50 பரிசு வழங்கப்படும்.

தேர்ந்து எடுக்கப்பட்ட கருத்து, 15–12–84 இதழில் பிரசுரிக்கப்படும்.

கருத்துப் போட்டி நிபந்தனைகள்:—

(1) கருத்துக்கள் எங்களுக்கு வந்து சேரவேண்டிய கடைசி தேதி 25–11–84. அதன்பின் வரும் கருத்துக்கள் போட்டிக்கு ஏற்றுக்கொள்ளப் படமாட்டா.

(2) போட்டியில் கலந்து கொள்பவர்களுக்கு வயது வரம்பு கிடையாது.

(3) போட்டியில், ஆசிரியர் தீர்ப்பே முடிவானது. சட்டப்படி கட்டுப்படுத்த முடியாது.

(4) கீழே உள்ள பாரத்தை பூர்த்தி செய்து, "கருத்து"டன் சேர்த்து அனுப்ப வேண்டும். அது இல்லாமல் வரும் கருத்துக்கள் ஏற்றுக்கொள்ளப் படமாட்டா.

ராணி காமிக்ஸ்

1091, பெரியார் நெடுஞ்சாலை,
சென்னை–600 007.

கருத்துப் போட்டி எண்: 2

பெயர்: ....

முகவரி: ....

....

....

....

கருத்துப் போட்டி நிபந்தனைகளுக்கு நான் கட்டுப்படுகிறேன்.

தேதி: ....

(கையொப்பம்)

உங்கள் கருத்து!

சித்திரக் கதையை படித்துவிட்டு, உங்கள் கருத்துக்களை எழுதி அனுப்புங்கள்
முகவரி: "ராணி காமிக்ஸ்",
1091, பெரியார் நெடுஞ்சாலை,
சென்னை-600007.

மர்ம முகமூடி!

"மர்ம முகமூடி!" கதையில் தகப்பனுருக்கு ஆபத்து என்றதும் ரிட்சி பாய்ந்து வந்து போராடும் கட்டம் என்னை பிரமிக்க வைத்தது. சட்ட விரோதிகளைப் பிடிக்க அவன் நடத்திய தர்ம யுத்தம் அபாரம்!

—எம். முகமது ஹாரிப், காந்திபுரம், கோவை-12.

பாட புத்தகத்தை படிக்கும் அக்கறையுடன் "மர்ம முகமூடி"யை படித்தேன்.

—எம். ஏ. அனஸ், லால்பேட்டை.

தேர்தலை பின்னணியாக வைத்து அமைந்த கதை, தேர்தல் போல் சூடாகவே இருந்தது!

—சி. அனிதா, திருவள்ளூர்.

சண்டைக் காட்சிகள் அனைத்தும் தூள் பறத்தின. ரிட்சியின் வீரமும், கடமை உணர்வும் கண் முன் நிற்கின்றன!

—வடிவேல் முருகன், சேலம்-4.

சித்ரா மணாளன் எழுதும் "அணைக்கட்டு கொலைகள்" தொடர்கதை ஆரம்பமே படு விறுவிறுப்பு!

—ஏ. இளங்கோ, செங்குன்றம், சென்னை-52.

"அணைக்கட்டு கொலைகள்" தொடர்கதையை படித்து முடித்த பிறகும் நெஞ்சு "படக் படக்" என்று அடித்துக் கொண்டே இருந்தது!

—ஜி. பழனி, டி. கண்ணன், சிலால்.

மர்மம், விறுவிறுப்பு, பயங்கரம், துப்பறியும் வீரம் அத்தனையும் அணைக்கட்டு கொலைகள் முதல் அத்தியாயத்திலேயே நிறைந்திருந்தது. அடுத்து படிக்க ஆர்வமுடன் இருக்கிறேன்.

—கே. ஈசுவரன், கொன்னமடை, நம்பியூர்.

சித்திரக் கதையுடன், இன்னொரு தொடர்கதையும் வெளி வருவதை வரவேற்கிறேன்.

—டி. கார்த்திகேயன், கொளிஞ்சிவாடி.
—ஜே. ரமேஷ், சிதம்பரம்.

அதே விலையில் பக்கத்தை அதிகரித்த ராணி காமிக்சுக்கு என் வாழ்த்துக்கள்.

—சந்திரகலா, பழனி.

ராணி காமிக்ஸ்

அடுத்த இதழில்...!



007 ஜேம்ஸ் பாண்ட்

துப்பறியும்,

மிஸ்டர் ஏபிசி

முழு நீள சித்திரக் கதை!

மற்றும்

சித்ரா மணாளன் எழுதும்,

அணைக்கட்டு கொலைகள்!

மர்ம **பேய்த்** தொடர்கதை!

ரூ.50 பரிசு : வாசகர் போட்டி!

படிக்கத் தவறாதீர்கள்!

1.12.84-ல் வெளிவருகிறது!

RANI COMICS
(TAMIL FORTNIGHTLY)

Regd. No. TN/MS(N)/461

விண்ட்ஸர் பிஸ்கட்ஸ்–எல்லோராலும் விரும்பப்படுவன

விண்ட்ஸர்® விண்ட்ஸர் ஃபுட்ஸ் லிமிடெட், வதோதரா–390014

Marketing Agents : SESHADRI ASSOCIATES, P. O. Box No. 4976, MADRAS-600 017.

PRINTED AT RANI PRINTERS, MADRAS-7.